www.tamilarangam.net

# ஈழநாடு தீக்கிரை,

## மற்றுமொரு கருத்துச் சுதந்திர மறுப்பே

எம் விடுதலைப் போராட்ட வரலாற்றுடன் மாற்றுக் கருத்துகளை ஜீரணிக்க முடியாது தடுக்க முனைவது ஒரு போராட்டமாகவே மாறியுள்ளது. இந்த வகையில் பத்திரிகைகளை தடை செய்தல், மிரட்டுதல், தாக்குதல், எரித்தல், இல்லாது போனால் கொலை செய்தல் என பல வழிகளிலும் நிறையவே நாம் கண்டு உள்ளோம்.

எம் போராட்ட வரலாற்றில் இந்திய இராணுவம் ஈழநாடு, ஈழமுரசு பத்திரிகைக்கு குண்டு வைத்து தகர்த்தது. இலங்கை இராணுவம் உதயன் பத்திரிகைக்கு குண்டு விசி தகர்த்தது. ஈழநாடு ஆசிரியர், வீரகேசரி ஆசிரியர் என இருவரை புலிகள் படுகொலை செய்தனர். யாழ் மண்ணில் வீரகேசரி கிளையை போட முனைந்த போது EPஅதன் உபகரணம் முழுவதையும் பறிமுதல் செய்தனர். EPயிடம் இருந்து இவைகளை பின் புலிகள் பறிமுதல் செய்தனர். இப்படி பல. பத்திரிகைகளுக்கு எதிராக வன்முறையை எல்லோரும் போட்டி போட்டே செய்தனர்.

இந்த வகையில் ஈழநாடு எரிக்கப்பட்டதும், மிரட்டப் படுவதும் எக்காரணம் கொண்டும் நியாயப் படுத்தமுடியாது. ஈழநாடு நடுநிலை எனக் கூறியபடி பாசிசத்தை நியாயப் படுத்துபவர்களே. அதற்காக அதை எதிர்கொள்ள மக்களைச் சார்ந்து இருப்பதற்கு பதில் எரித்தல், மிரட்டுதல் என்பது, எந்த புலிகளின் பாசிசத்தை எதிர்க்க முனைகின்றனரோ அதே பாசிசத்தைக் கைக்கொள்கின்றனர்.

மக்களை சார்ந்திராத புலிகளின் தனிநபர் பயங்கர வாதத்தையே ஈழநாடு எரித்தவர்களும் கைக்கொண்டு உள்ளனர். இச் சம்பவத்தைத் தொடர்ந்து "தமிழீழ விடுதலைப் புலிகள் பிரச்சாரப் பிரிவு (மாத்தையா குழு)" என்ற ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டுள்ளனர். சமர் 10 அல்ல சமர் 11 இல் இத் துண்டுப் பிரசுரம் மற்றும் மாத்தையா படுகொலை, ஈழநாடு எரிப்பு தொடர்பாக விரிவான விமர்சனம் வெளிவரும். இத் துண்டுப் பிரசுரத்தில் "பிரபாகரனின் துரோகத் தலைமைக்கு ஆதரவான சகல பத்திரிகைகள், ஸ்தாபனங்கள், தனிநபர்களுக்கு எதிராக எம்மால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என எச்சரித்துள்ளனர்.

இவ் எச்சரிக்கை பிரபா ஆதரவளர்களுக்கு மட்டுமல்ல இவர்களை விமர்சிபவர்களுக்கும் சேர்த்தே விடப்பட்டுள்ளது. எமது போராட்ட வரலாற்றில் இது போன்று வளர்ந்தவை, பின் பல ஆயிரம் மக்களை படுகொலை செய்ததை நாம் கணமுடியும். இதே மாத்தையா, பிரபா உடன் இருந்த காலத்தில் பிரபாவுக்கு சளைக்கமல் பல ஆயிரம் பேரை கொன்றுழித்தவரே. பிரபா தமிழ் நாட்டில் தங்கிவிடவே தளத்தில் இருந்த மாத்தையா இயக்கத்தைக் கட்டியதுடன் ஆயிரக்கணக்கானோரைக் கொன்று குவித்தார். மாத்தையா குழு என உரிமை கோருவோர் அக்கொலைகளையும் நியாயப் படுத்தியபடியே உள்ளனர்.

இக் கொலைகளை முடி மறைத்த படி மாத்தையாவை தூய்மையானவராக காட்ட முனையும் செயற்பாடும் அதன் பின்னுள்ள நோக்கமும் இன்னும் ஒரு பிரபாவையும் ஒரு புலியையும் கோரிநிற்பதே. அதே புலிப் பெயருடன் தொடங்கும் உங்கள் செயற்பாடுகள் அதே பிரபா வழிப்பட்டதே ஒழிய ஜனநாயக வழிப்பட்டவை அல்ல.

ஈழநாடு நடுநிலை எனக் கூறியபடி இன்று என்ன செய்கின்றனர். எம் போராட்டம் தொடர்பான ஈழநாட்டின் நடுநிலை விமர்சனம் என்பது, புலிகளின் 'களத்தில்' பத்திரிகையில் வருவதற்கு மேல் சென்றதில்லை. ஈழநாட்டின் நடுநிலை ஆய்வு 'களத்தில்' வருவது மட்டுமே.

பிரபாவின் சதியில் மாத்தையா படுகொலை செய்யப்பட்ட நிகழ்வு தொடர்பாக ஈழநாடு நியாயப் படுத்தியுள்ளது. அதாவது பாசிசத்துக்கு துணைபோயுள்ளது. ஏன் முன்பு கனடாவில் தயாகம் ஆசிரியர், செந்தாரகை ஆசிரியர் புலிகளால் தாக்கப்பட்ட போது ஈழநாடு மௌனம் சாதித்தது. இவை புலிகளின் பாசிசத்துக்கு துணைபோனதே. ஐரோப்பியவில் பல பத்திரிகளை புலிகள் மிரட்டிய போது ஈழநாடு எதிர்த்தா?. இலங்கையில் இருந்து வரும் 'சரிநிகர்', லண்டனில் இருந்து வரும் 'ஈழபூமி', கனடாவில் இருந்து வரும் 'தாயகம்' என்பன பாரிஸ் கடைகளில் வைக்கப்பட்ட போது புலிகளினால் மிரட்டப்பட்டு விற்பது தடுக்கப்பட்டது. அப்போது ஈழநாடு ஏன் குரல் கொடுக்கவில்லை. இதுவா ஈழநாட்டின் நடுநிலை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அண்மையில் லா சப்பலில் நடந்த மோதலை, ஏன் பாரிஸில் வரும் ஈழநாடு நேர்மையாக நடுநிலையுடன் எழுதமுடியவில்லை. எம் மண்ணில் 4000 க்கும் மேற்பட்ட கைதிகள் புலிகளின் வதைமுகாமில் உள்ளனர். அது பற்றி ஒரு வார்த்தையை ஈழநாடு எழுத முடியவில்லையே; ஏன்?. சர்வதேச மன்னிப்புச் சபை கூட புலிகளின் மனித உரிமை மிறல்களை அம்பலப்படுத்தியுள்ளது. ஈழநாடு அவைகளை நடுநிலையுடன் பிரசுரிக்கவில்லையே; ஏன்?.

ஈழநாடு நடுநிலையாக உள்ளதா? அல்லது புலிகளின் கைக் கூலிகளாக உள்ளனரா?. அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு வாக்களத்து வாங்குகின்றனரா?.

ஈழநாடு எரித்தைக் கண்டித்த திலகர் இப்படிக் கூறுகின்றார் "தமிழ் ஈழ எதிரிகளால் எம்மிடையே உள்ள 'புல்லுருவிகளின் ஊடாக தொடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலே ஈழநாடு மீது...."

அப்படிப் பார்த்தால் இது புலிகளுக்கும் பொருந்தும். தாயகம், செந்தாமரை ஆசிரியர்களை தாக்கியவர்களும் புலிகளே. பாரிஸில் சில பத்திரிகை மீதான தடையை விதித்தவர்களும். புல்லுருவிகளே. பல பத்திரிகைக்கு விடப்படும் மிரட்டலும் இப் புல்லுருவிகளே செய்கின்றனர். இவைகளைச் செய்வது புலிகளே. திலகர் பேட்டி கொடுக்கும் போது தாம் செய்தவைகளை மறந்துபோவது ஏன்?. தம்மால் வளர்த்து எடுத்த இது போன்ற நடவடிக்கை தமக்கு எதிராக வரும் போது, அது புல்லுருவித்தனமாக எப்படி மாறிவிட முடியும். ஈழநாடு போன்று நடுநிலைப் பத்திரிகைக்கு திலகரினதும் புல்லுருவித்தனம் தெரிய நியாயம் இல்லைத்தான்.

அதுதான் கருத்துச் சுதந்திரம் மறுத்த இன்னும் ஒரு திலகரின் பேட்டியைப் பிரசுரித்து கருத்துச் சுதந்திர மறுப்புக்கு துணைபோய்யுள்ளனர். ஏன் அதே பர்சிசத்தை நியாயப்படுத்தும் வான்மதி, மண், எலையா..... போன்றவையும் ஈழநாடு எரிப்புக்கு அழுது வடிந்து உள்ளன. இவர்களே கருத்துச் சுதந்திர பறிப்புக்கு துனைபோனபடி, எப்படி கருத்துச் சுதந்திரத்துக்கு குரல் கொடுக்க முடியும்.

கருத்துச் சுதந்திரத்தை மறுத்தபடி கருத்துச் சுதந்திரத்துக்கு குரல் கொடுப்பது என்பது வேடிக்கையான விடயமல்ல. இதன் உடாகவே மக்களின் சுதந்திரத்தை கால்களில் போட்டு மிதிக்கின்றனர்.

கருத்துச் சுதந்திர மறுப்புக்காக போராடும் அனைவரும், அனைத்து கருத்துச் சுதந்திர மறுப்புக்கு எதிராக போராடவேண்டும். இதை ஈழநாடு செய்யுமா?, அல்லது இன்னுமொரு களத்தில் பத்திரிகையாகவே தொடர்வீர்களா?.

புலிகளின் பாசிசப் படுகொலைகளை எதிர் கொள்ள ஈழநாட்டை எரிப்பதால் புலிகள் திருந்தி விடுவார்களா?. நீங்கள் மாத்தையா பிரிவு எனக் குறிப்பிடின் மாத்தையாவினால் கொலை செய்யப்பட்ட மக்களுக்கு என்ன தீர்வு வைக்கின்றீர்கள். அவர்கள் துரோகிகளா?, சமுகவிரோதிகளா?.

இதைத் தான் பிரபா தலைமைல் உள்ள புலியும் கூறியது. இதைத்தான் மாத்தையா தலைமையில் உள்ள புலியும் கூறியது. இதற்கு நிண்ட பலஆதரங்கள் உண்டு. இரண்டும் ஒன்றே. இரண்டும் இரத்த ஆற்றில் மூழ்கியவர்களே.

இவர்களுக்கு இடையிலான அதிகரப் போட்டியில் பொய்யான குற்றச் சாட்டில் பிரபா மாத்தையாவை படுகொலை செய்துள்ளர். இதை யார்ரும் நியாயப் படுத்த முடியாது.

மாத்தையா படுகொலை செய்யப்பட்டது கண்டிக்கப் படவேண்டும்.
ஈழநாடு எரிக்கப்பட்டது கண்டிக்கப்படவேண்டும்.
இதற்கு எதிராக போராட விட்டால் மேலும் மேலும் எம் உரிமைகளை இழப்பதாகவே இருக்கும்.
புலிகளின் பாசிசத்தை எதிர் கொள்ள மக்களைச் சார்ந்து நில்லுங்கள். அதை விடுத்து புலிகளின் அதே அராஜகத்தை தொடரதிர்கள்.
பத்திரிகைகளே உண்மையின் பக்கம் நேர்மையாக எழுதுங்கள். புலிகளின் பாசிசத்தை நியாயப்படுத்ததிர்கள்.

23-01-1994
சமர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்